# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான ‘திராவிட மாடல்’ ஆட்சியில் தியாகிகள் - சான்றோர்களுக்கு நினைவரங்கங்கள் - சிலைகள்!



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 10.8.2023 அன்று சென்னை, நுங்கம்பாக்கத்திலுள்ள பள்ளிக்கல்வித் துறையின் பேராசிரியர் க. அன்பழகன் கல்வி வளாகத்தில், புதிதாக நிறுவப்பட்டுள்ள பேராசிரியர் க. அன்பழகன் அவர்களின் திருவுருவச் சிலையை திறந்து வைத்து, அச்சிலை அருகில் வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.11.2023 அன்று சென்னை, மாநிலக் கல்லூரி வளாகத்தில் செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் நிறுவப்பட்டுள்ள மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங் அவர்களின் முழு திருவுருவச் சிலையை சிறப்பு விருந்தினரான உத்தர பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், வி.பி. சிங் அவர்களின் துணைவியார் திருமதி சீதா குமாரி, மகன் அஜயா சிங் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரது முன்னிலையில் திறந்து வைத்தார்.



முத்தமிழறிஞர் கலைஞர் – ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சென்னை.



பேராசிரியர் க. அன்பழகன் – சென்னை



மேனாள் இந்தியப் பிரதமர், சமூக நீதிக் காவலர் வி.பி.சிங், சென்னை



பூலித்தேவன் படைத்தளபதி வெண்ணி காலாடி – தென்காசி மாவட்டம்



தனி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் – திருப்பூர் மாவட்டம்.



பாரத ரத்னா, பாபா சாகேப் டாக்டர் அம்பேத்கர், சென்னை



கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் காந்தி மண்டபம், சென்னை



மருது பாண்டியர்கள் திருவுருவச் சிலை – காந்தி மண்டபம், சென்னை



சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலித்தாய் – சிவகங்கை மாவட்டம்.



உத்தமர் காந்தியடிகள் – சென்னை



மகாகவி பாரதியார் வாழ்ந்த இல்லம் – வாரணாசி (உ.பி.)

## முதல் பக்கத் தொடர்ச்சி...

அன்று 77 இலட்சத்து 87,343 மதிப்பீட்டில் குவி மாடத்துடன் கூடிய சிலை

**சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் சிலை**

சமூகநீதிக் காவலர் முன்னாள் இந்தியப் பிரதமர் திரு. வி.பி.சிங் அவர்களுக்கு சென்னையில் 27.11.2023 அன்று 52 இலட்சத்து 20,000 ரூபாய்ச் செலவில் திருவுருவச்சிலை.

**அயோத்திதாசப் பண்டிதர் சிலையுடன் மணிமண்டபம்**

சென்னை காந்தி மண்டப வளாகத்தில் திராவிடப் போரொளி அயோத்திதாசப் பண்டிதர் அவர்களுக்கு 1.12.2023 அன்று 2 கோடியே 48 இலட்சத்து 75,859 ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம்

**வீரமாமுனிவர் சிலையுடன் மணிமண்டபம்**

தூத்துக்குடி மாவட்டம், காமநாயக்கன்பட்டியில், “தமிழகராதியின் தந்தை” எனப் புகழ் படைத்த வீரமாமுனிவருக்கு , 22.1.2024 அன்று 1 கோடி மதிப்பீட்டில் சிலையுடன் மணிமண்டபம்.

**நாமக்கல் கவிஞர் சிலை**

நாமக்கல் நகரில் நாமக்கல் வெ.இராமலிங்கம்பிள்ளை அவர்களுக்கு, அவரது நினைவில்லத்தில் 22.1.2024 அன்று 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மார்பளவுச் சிலை

**முத்தமிழறிஞர் கலைஞர் நினைவிடம்**

பேரறிஞர் அண்ணா நினைவிட வளாகத்தில் 26.2.2024 அன்று ”கலைஞர் உலகம்” எனும் அருங்காட்சியகத்துடன் கூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நினைவிடம்

**பெரும்பிடுகு முத்தரையர், சர்.ஏ.டி. பன்னீர்செல்வம், எம்.கே.தியாகராஜ பாகவதர் மணிமண்டபங்கள்**

27.2.2024 அன்று திருச்சி மத்தியப் பேருந்து நிலையம் அருகில் பேரரசர் பெரும்பிடுகு முத்தரையர் அவர்களுக்கு 1 கோடியே 48 இலட்சத்து 22,829 ரூபாய் மதிப்பீட்டிலும், நீதிக் கட்சியின் தலைவர்களில் ஒருவராக விளங்கிய சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களுக்கு 77 இலட்சத்து 62,004 ரூபாய் மதிப்பீட்டிலும், தமிழ்க் கலை உலகில் ஏழிசை மன்னர் எனப் புகழப்பட்ட எம்.கே.தியாகராஜபாகவதர் அவர்களுக்கு 79 இலட்சத்து 39 ஆயிரத்து 122 ரூபாய் மதிப்பீட்டிலும் சிலையுடன் கூடிய மணி மண்டபங்கள்

**இரட்டைமலை சீனிவாசன், அண்ணல் தங்கோ டாக்டர் மு.வ.வீரன் சுந்தரலிங்கம் சிலைகள்**

27.2.2024 அன்று செங்கல்பட்டு மாவட்டம், அச்சிறுப்பாக்கத்தில் 2 கோடியே 17 இலட்சத்து 74 ஆயிரத்து 909 ரூபாய் மதிப்பீட்டில் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு சிலையுடன் கூடிய மணி மண்டபம், வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் சுதந்திரப் போராட்ட தியாகி அண்ணல் தங்கோ அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையையும், இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டையில் தமிழறிஞர் டாக்டர்.மு.வரதராசனார் அவர்களுக்கு 65 இலட்சத்து 76,562 ரூபாய் மதிப்பீட்டில் திருவுருவச் சிலையையும், தூத்துக்குடி மாவட்டம், கவர்னகிரியில் வீரன் சுந்தரலிங்கம் மணிமண்டபத்தில், ஏற்கனவே நிறுவப்பட்டுள்ள மார்பளவுச் சிலையை மாற்றி, 48 இலட்சத்து 66 ஆயிரத்து 383 ரூபாய் மதிப்பீட்டில் வீரன் சுந்தரலிங்கம் குதிரையில் அமர்ந்து போர் புரிவது போன்ற கம்பீரத் தோற்றத்துடன் கூடிய புதிய சிலை ஆகியவற்றை எல்லாம் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்கள்.

**சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடி திருவுருவச் சிலை**

சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணி காலாடியின் நினைவைப் போற்றும் வகையில் தென்காசி மாவட்டம், விசுவநாதப்பேரியில் வெண்ணி காலாடி அவர்களுக்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையையும்



வீரபாண்டிய கட்டபொம்மன் காந்தி மண்டபம், சென்னை



முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ.பி.ஜெ. அப்துல் கலாம் சென்னை.

**சுதந்திரப் போராட்ட வீராங்கனை குயிலி திருவுருவச் சிலை**

சிவகங்கை வட்டம், இராகினிப்பட்டியில் அமைந்துள்ள வேலுநாச்சியார் மணிமண்டப வளாகத்தில் சுதந்திரப் போராட்டவீராங்கனை குயிலித்தாய்க்கு 50 இலட்சம் ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள திருவுருவச் சிலையையும்

**சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் நாயக்கர் திருவுருவச் சிலை மற்றும் அரங்கம்**

சுதந்திரப் போராட்ட வீரர் தளி பாளையக்காரர் மலையாண்டி வெங்கிடுபதி எத்தலப்பர் அவர்கள் நாயக்கர் அவர்கள் வீரத்தைப் போற்றி 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை நகராட்சி அலுவலக வளாகத்தில் நிறுவப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் அவர்களின் திருவுருவச் சிலையையும், தளி பேரூராட்சி, திருமூர்த்தி நகரில் அமைக்கப்பட்டுள்ள எத்தலப்பர் நாயக்கர் நினைவு அரங்கம் ஆகியவற்றை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 9.10.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற நாளிலிருந்து இதுநாள்வரை, நாட்டிற்காகவும், தமிழ் மொழி வளர்ச்சிக்காகவும் பாடுபட்ட பெருமக்களின் தியாகங்களைப் போற்றி அவர்களுடைய சிலைகளையும் மணிமண்டபங்களையும், அரங்கங்களையும் அமைத்து வருங்கால இளைஞர்கள் அறிந்து பின்பற்றும் வண்ணம் இதுவரை 10 நினைவரங்கங்கள் 36 சிலைகள் அமைத்துள்ளார்கள். மேலும் பல தியாகிகளுக்குரிய நினைவுச் சின்னங்களையும் அமைத்து வருகிறார்கள். இவை இந்தியாவிற்கே வழிகாட்டத் தக்கவையாகும்.